## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 9. ஸ்ரீஅங்கத பூபதி

---

**உட்கருத்துக்கள்:**

கணவன் ஆன்மீகத்தில் ஈடுபட்டு இல்லறம் செய்ய வழிகாட்டும் போது அவனே ஒரு மனைவிக்குச் சிறந்த குரு.

ஆனால் அவன் தீய வழிகளிலோ, நாஸ்திகனாய் இருந்தோ மனைவியின் நல்ல ஆன்மீக முயற்சிகளைத் தடுத்தால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது.அதே தான் ஒரு கணவனுக்கும்!

பொறுமையாலும் பக்தியாலும் தன்னுள் உணர்ந்த உண்மையை அனைவருக்கும் உணர்த்த முடியும்.

மனைவி மூலம் கணவனும், கணவன் மூலம் மனைவியும் மாற்றத்துக் ஆளாகும் வழியை இல்லறம் வலியுறுத்துகின்றது.

கிழக்கு பாரத பூமியில் ஒரு சிறிய அரச குடும்பம்.இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள். மூத்தவர் ராயசிங் முறையே அரசனாகப் பொறுப்பேற்க, இளையவர் அங்கத பூபதி படைகளைப் பராமரித்து, தேசத்தின் பாதுகாப்பில் ஸ்ரத்தையுடன் கவனம் செலுத்தினார்.அரச குடும்பத்துக்கே உரிய மிடுக்கும் கம்பீரமும் கொண்டு இவர்கள் ராஜ்யம் செய்தனர்.

### முள் மேல் விழுந்த பட்டுத்துணி

அங்கத பூபதியின் மனைவி மிகச் சிறிய வயதிலேயே தன் தந்தையின் குருமூலம் தானும் ஸ்ரீமன்நாராயணனை உபாசிக்கும் வழிமுறைகளை முறைப்படி அறிந்து கொண்டவர்.அதனால் மெதுவாகப் பக்குவம் பெற்று இல்லறமும் ஆன்மீகமும் கலந்த பேரின்ப வாழ்க்கை வாழ ஆசைப்படுகிறார்.முடியுமா? அங்கத பூபதிக்குப் பெரிய அளவில் பக்தி, ஆன்மீகம் என்பதெல்லாம் இல்லை.இதை அறிந்து மனைவியும் அமைதியாய் முள் மேல் விழுந்த பட்டுத்துணி போலத் தன் வாழ்க்கை நாசூக்காக ஆன்மீகம் கலந்து நிகழ்த்துகிறார்.

குரு சேவை செய்ய முற்பட்ட பதிவ்ரதை

அப்போது அவர்கள் தேசத்துக்கு அக்காலத்தில் தன் உண்மையான பக்தியாலும் சேவையாலும் உயர்ந்த ஒரு ஆன்மீகப் பெரியார் எழுந்தருளினார்.அவரவர் தம் தகுதிக்கும் சக்திக்கும் ஏற்ப குரு பூஜை செய்து ஆசீர்வாதமும் உபதேசமும்

பெற்றனர்.

பூபதியின் மனைவிக்கு ஒரே ஆசை.அரசனின் குடும்பம் தன் வினை தீர, ஆன்மீக வழியில் மக்களுக்கு வழிகாட்ட அவருக்கு உரிய மரியாதை செய்ய வேண்டும் என்று தன் எண்ணத்தைக் கணவனிடம் தெரிவித்தாள்.

"என்னை விட வெளியூர் ஆள் உனக்கு தெய்வமோ? அரச குலத்தில் ராணிக்குக் கணவனே உயிரும் குருவும் ஆகும்." - என்று அறியாமையால் பேசினான்.

"உண்மைதான் நீங்களே தெய்வம், ஆனால் உங்களுடன் இணைந்த பேரின்ப வாழ்க்கைக்கு ஆசீர்வாதம் பெற இவரைப் போல் அன்பர்கள் தேவை!" - மனைவி

"சரி! என்னை விட அன்பர்களும் அவர்தம் இறைவனும் முக்கியம் என்றால், உன் ஸ்வாமியைக் காட்டுக!" - கூறி விட்டு வெளியே சென்றான் பூபதி.

கணவனது வார்த்தைகள் முள் போல் மனதைத் தைக்க, அவ்வார்த்தைகளும் இறைவனின் வாக்கே என ஏற்றுக் கொள்கிறாள்.மிகவும் ஸ்ரத்தையுடன் உண்ணா வ்ரதத்தை ஆரம்பித்தாள். ஆன்மீகப் பிடிப்பு இல்லாத குடும்பம் உண்மையான வெற்றியையும் அன்பையும் மகிழ்ச்சியையும் பெற முடியாது என்று தன் கணவன் உணர வேண்டும் என்ற சங்கல்பத்தில் வ்ரதம் மேற்கொள்கிறார்.

**கனவில் வந்த பூரி ஜகன்நாதன்**

அன்று இரவு பூபதியின் பூர்வ ஜென்ம ப்ராப்தியின் பேரில் ஜகன்நாதர் கனவில் தரிசனம் அளித்தார்.பூபதி நானே உன் பத்னியின் மனதில் உன் ஸ்வரூபத்தில் வாழும் பரம்பொருள்." என்று உண்மையை உணர்த்துகிறார்.

அறியாமை தெளிந்த பூபதி மனைவியிடம் எழுந்து தன் நிலையை வெளியிட்டு அவளது அன்பையும் ஆன்மீக நெறியையும் தான் பழித்துப் பேசியதற்கு மன்னிப்பு வேண்டி அவளுக்கு உறுதுணை செய்தான்.அம்மையார் மிகவும் நன்றியுடன் தன் இல்லறத்தையே இறைப்பணியென செய்து வாழ்கிறார்.

வைரம் தந்த சோதனை

ஒரு காலத்தில் பக்கத்து தேசத்தின் தொல்லையால் போர் மூண்டது.பூபதி மிக சாமார்த்தியமாகப் போர் செய்து வெற்றி பெற்றான்.வழக்கம் போல் பகை நாட்டின் செல்வங்களை மீட்டுத் தம் ஊருக்கு எடுத்து வரும் போது அழகிய மிக உயர்ந்த வைரக்கல் பதக்கம் ஒன்றை பூபதி காண்கிறான்.

[இக்கட்டத்தில் தன் அன்பு மனைவியின் நிழலில் அவனுள் ஆன்மீகமும் பாவ பக்தியும் வேர் ஊன்றி இருப்பதை நாம் தெரிந்து கொள்கிறோம்.]

"***ஆஹா! கொள்ளை போன பண்டைய கோஹினூர் வைரம் இதுவோ? பூரி க்ஷேத்ரத்தில் வாழும் என் ப்ரபுவின் ஸ்யாமளத் திருமேனியில் இது மிளிர்ந்தால்?! நினைக்கவே அழகாக இருக்கிறதே!***" என்று வைரத்தைத் தனியே எடுத்து வைத்து மற்ற பொருட்களை முறையே அரசனான தன் அண்ணனிடம் கொடுத்தான்.இதை மறைத்ததன் காரணம் அவன் அண்ணனுக்கு ஆன்மீக நாட்டம் இல்லை.

இதைபற்றி அறிந்த அரசன் கோபம் கொண்டான்.தன்னுல் இருக்கும் பொருள் பற்றால் தம்பியை அவதூறு பேசினான்."**இதைப் போல் இன்னும் எத்தனை நாள் எத்தனைச் செல்வங்களை மறைத்துத் திருடினாய்?**" என்று கேட்டு அவமானம் செய்தான்.

மனைவியின் வழிநடத்துதலால் அமைதி காக்கக் கற்றுக் கொண்ட பூபதி பேசாமல் இருந்தால். இதைப் போல ஒரு வினையைத் தான் முன் ஜென்மத்தில் செய்ததை உணர்ந்தான்.அன்று இரவு உணவு உண்ணும் போது தங்கைகள் மிகவும் கேவலமாக அவமானம் செய்தபடியே உணவிட்டனர்.

"இவர்கள் அன்பின்றி அளித்த உணவு விஷம் ஆகும்!" என்று எண்ணிய பூபதி அன்று இரவே வைரத்துடன் பூரி க்ஷேத்ரத்தை நோக்கிப் புறப்பட்டான்.இதை உணர்ந்த அவன் அண்ணன் அவனைக் கொல்ல உத்தவிட, சில வீரர்கள் பூபதியைப் பின்தொடர்ந்தனர்.ஒரு காட்டாற்றின் கரையில் அவர்கள் கைகளில் சிக்கினர் அத்தம்பதியினர்.அப்போது, "ஊழ் வினைப் பலனைத் தீர்க்கும் கைங்கர்யமாக ஹே ஜகன்நாதா! இதோ இந்த வைரம் உனக்கு சேரட்டும்!" என்று சங்கல்பம் செய்து மூலமந்த்ரம் ஜெபித்து அதை ஆற்றில் வீசினான் பூபதி.அதனால் ஒன்றும் செய்ய முடியாத வீரர்கள் அவனை விட்டுப் போயினர்.

**ஜகன்நாதன் மார்பில் ஜொலிக்கும் பதக்கம்**

சில நாட்களில் பூபதியும் மனைவியும் பூரியை அடைந்தனர். கோயிலுக்குள் சென்று ஜகன்நாதரைக் காணும் போது அவர்கள் வீசிய வையிரப் பதக்கம் அவர் மார்ப்பில் மின்னுவதைக் கண்டு பூரித்து மேலும் பக்தி பூண்டனர்.

பூஜாரிகள் தம் கனவில் ஈசன் தோன்றி வைரத்தின் பின்னணியை விளக்கி அதைப்

பெறச்செய்த லீலையை எடுத்து விளக்கினர்.இச்செய்தி மக்களுக்கும் ராய சிங்குக்கும் தெரிய, மனம் மாறிய அரசன் பூரி வந்து தம்பியைச் சரண் புகுந்தான், மன்னிப்பு வேண்டினான்.அவனையும் மெதுவாகத் பூபதி ஆன்மீகப் பணி கலந்த அரசன் ஆக்கினார்.அவரது மனைவியின் இல்லறத் தூய்மையின் வெற்றி இதுவன்றோ?

ஹரி ஓம்!